# அண்ணாமலை - அன்புமணியைக் கண்டால் உடனே குஜராத்துக்கு அனுப்புங்கள்!


In dry Gujarat, alcohol flows when cops escort prisoners
Policeman Found Drunk In One Case, Undertrial In Another

குஜராத் மாநிலம் பி.ஜே.பி.யின் ஆட்சியில் இருக்கும் மாநிலம். நமது பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும், பல ஆண்டு காலம் ஆண்ட மாநிலம். மோடியும், அமித்ஷாவும் இன்று இடம் மாறியிருந்தாலும் அவர்களது கண்காணிப்பில் இருக்கும் மாநிலம்! மதுவிலக்கு அமலில் இருக்கும் மாநிலம். சிறப்பான நிர்வாகம் நடைபெறும் மாநிலம் என பா.ஜ.க.வினர் "தம்பட்டம்" அடித்துக் கொள்ளும் மாநிலம்!

அந்த மாநிலத்தில் காவல்துறை செயல்படும் விதத்தைக் குறித்து ஒரு செய்தியை "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேடு வெளியிட்டுள்ளது. திரைப்படங்களில் வரும் காட்சிகளை விஞ்சிடும் அந்தக் காட்சிகள் குறித்த தெளிவான விபரங்களைப் படியுங்கள்.

குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டத்தில், பிரபல கள்ளச் சாராய வியாபாரி திரேஜ் கரியா. சிறையில் இருக்கும் இந்தப்பேர் வழியை காந்தி நகரில் உள்ள ஒரு நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக இரண்டு போலீசார் அழைத்துச் சென்றுள்ளனர். நீதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டிய இந்த நபரை, அந்த இரண்டு காவலர்களும் குஜராத்தின் ஜீனகாத் (Junagadh) பகுதியிலுள்ள அவருடைய (கள்ளச்சாராய வியாபாரி) வீட்டில் விட்டுள்ளனர்.

அந்த கள்ளச்சாராய வியாபாரியை அவருடைய வீட்டில் விட்டு விட்டு அந்த இரண்டு காவலர்களும் மது மற்றும் உணவு அருந்திட ஒரு ஹோட்டலுக்குச் சென்றுள்ளனர். மது போதையில் ஒரு காவலர் அவருக்கு உணவு பரிமாறிய ஊழியரிடம் சண்டையிட, அந்த ஹோட்டல் முதலாளி போலீசில் புகார் கொடுத்துள்ளார்.

இது ஒரு கூத்து என்றால் இன்னொரு கூத்து ராஜ்காட்டில் நடந்துள்ளது. அவேஷ் அவுடியா எனும் விசாரணைக் கைதியை ராஜ்காட் சிறையிலிருந்து விசாரணைக்காக போலீசார் அழைத்துச் சென்று விட்டு பின்னர் சிறைச்சாலையில் திரும்ப விட்டு விட்டுள்ளனர். இது நடந்தது மாலை 5.45 மணி அளவில். மதுபோதையில் இருந்த கைதி அவேஷ் அவுடியாவால் சரியாக நடக்க முடியாது தள்ளாடியதைக் கண்ட சிறை ஊழியர் அவரை மருத்துவ சோதனைக்கு அனுப்பினார். விசாரணைக்கு காவலரால் அழைத்துச் செல்லப்பட்டு திரும்பிய அந்த நபர் மது போதையில் இருந்தது அங்கு ஊர்ஜிதமானது.


Two Amreli constables who had escorted bootlegger Dhiraj Karia to a Gandhinagar court dropped him off at his house in Junagadh instead of taking him to jail. Then they proceeded to a hotel to eat and drink

இவைகள் இரண்டும் ஏடுகளில் "In Dry Gujarat, alcohol flows" மதுவிலக்கு அமலில் உள்ள குஜராத்தில் மது (வெள்ளமாய்) பாய்கிறது என்ற தலைப்பில் செய்திகள் வெளிவந்துள்ளது.

**இங்கே தமிழ்நாட்டில் இருந்து கொண்டு சம்மந்தா சம்பந்தமின்றி வெற்றுக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் அண்ணாமலை அவரது கூட்டணித் தோழர் அன்புமணி வகையறாக்களை கண்டால் - உடனடியாக குஜராத்துக்கு அனுப்பி வையுங்கள்.**

---

கேரளா – வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த

# நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு ரூ. 3 லட்சம் நிதியுதவி - ஆறுதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 1-**

**கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

*இது தொடர்பாக - முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-*

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா 2 கிராமம், மரப்பாலம், அட்டிக்கொல்லி பகுதியைச் சேர்ந்த காளிதாஸ் (வயது 34) த/பெ.காளி என்பவர் கட்டுமானப் பணிக்காக கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்திலுள்ள முண்டக்கை சூரல்மலைக்கு சென்றிருந்த போது 30.07.2024 அன்று அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

கேரள மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த காளிதாஸ் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இயற்கைப் பேரிடரில் சிக்கி உயிரிழந்த காளிதாஸ் அவர்களின் குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*

---

கோயம்புத்தூர் மாவட்டம் - வால்பாறை மற்றும் பொள்ளாச்சியில்- இருவேறு சம்பவங்களில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, ஆக. 1-*

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மற்றும் பொள்ளாச்சியில் ஏற்பட்ட இருவேறு சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், சோலையார் அணை, இடதுகரை பகுதியில் மழுக்குப்பாறை செக்போஸ்ட்டிலிருந்து பன்னிமேடு செல்லும் பொதுப்பணித் துறைச் சாலையின் அருகில் உள்ள வீட்டின் அருகே 30.7.2024 அன்று அதிகாலை சுமார் 4.00 மணியளவில் மண்சரிவு ஏற்பட்டதில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த திரு மதி.ராஜேஸ்வரி (எ) முத்து (வயது 57) க/பெ. ஆறுமுகம் மற்றும் செல்வி தனப்பிரியா (வயது 15) தா/பெ. சுகுணா ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், திப்பம்பட்டி கிராமத்தில் தனியாருக்குச் சொந்தமான ஓட்டுவீட்டின் மேற்குப்பக்கச் சுவர் 30.07.2024 அன்று இரவு பெய்த மழையினால் அதிகாலை சுமார் 3.00 மணியளவில் இடிந்து மேற்குப் பக்க ஓட்டு வீட்டின்மீது விழுந்ததில் வீட்டினுள் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த ஹரிஹரசுதன் (வயது 21) த/பெ.அன்பழகன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த இருவேறு சம்பவங்களினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுத்திடல்**

அ.து.ந.க.எண்.அ3/678/2024 **இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (Tender)**

மேற்பார்வை பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

2024-25 ஆம் ஆண்டு மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு ரூ.5 கோடி மதிப்பீட்டில் 19 விளையாட்டுத் திடல்கள் மேம்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் பணிகள் மற்றும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் "EmpowHER" பெண்கள் உடற்பயிற்சிக்கூடம் மேம்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் பணிகள் (Two cover system) மின்னணு ஒப்பந்தப்புள்ளி (Tender)

**பணியின் விவரம் குறைந்தது ரூ.158.70 லட்சம் அதிகபட்சம் ரூ.179 லட்சம் Including GST**
முன்வைப்பு தொகை : பணியின் மதிப்பில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **14.08.2024 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **16.08.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2694 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மேற்பார்வை பொறியாளர் (பூ(ம)வி)**


---

சிங்கப்பூரில் விரிகுடாவின் தோட்டங்கள் - பூங்காக்கள்

# மூன்று நீர்முனைத் தோட்டங்கள் - கட்டிடத் தொழில் நுட்பப் பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பார்வையிட்டார்!

*சிங்கப்பூர், ஆக. 1 -*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் தொடர்பான ஆய்வுகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாகச் சென்றுள்ளது. இந்தக் குழுவில் வேளாண்மை - உழவர் நலத்துறை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் செல்வி அபூர்வா, உள்ளிட்ட உயர் அலுவலர்கள் உடன் சென்றனர்.

இந்த அரசுமுறைப் பயணத்தின் ஒரு அங்கமாக நேற்று முன்தினம் (30.07.2024) சிங்கப்பூர் நகரில் மெரினா நீர்த்தேக்கத்தை ஒட்டி 260 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விரிகுடாவின் தோட்டங்கள் (தி கார்டன்ஸ் பை தி பே) என்ற பூங்காவினை வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் பார்வையிட்டார்.

இந்தப் பூங்காவில் மெரினா தெற்கில் உள்ள பே சவுத் கார்டன், மெரினா கிழக்கில் நிறுவனர்களின் நினைவகத்துடன் கூடிய பே ஈஸ்ட் கார்டன் மற்றும் டவுன்டவுன் கோர் (Down Town Core) மற்றும் கல்லாங்கில் உள்ள பே சென்டரல் கார்டன் ஆகிய மூன்று நீர்முனைத் தோட்டங்களைப் பார்வையிட்டு அதன் சிறப்பம்சங்களை அங்குள்ள அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், 130 ஏக்கர் பரப்பளவில் உள்ள பே சவுத் கார்டனில் அமைந்துள்ள மலர் குவி மாடமான (Flower Dome) உலகின் மிகப்பெரிய கண்ணாடி பசுமை இல்லத்தையும் பார்வையிட்டனர்.

இப்பூங்காவிலுள்ள அதிக ஆற்றல், பயன்பாட்டுத்திறன் கொண்ட கட்டடத் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தும் கண்ணாடி வீட்டினையும் (conservatory) வானிலைக் கல்விக்கான விரிவாக்க மையத்தினையும் பார்வையிட்டார்.

தமிழக நகரங்களில் பசுமையான சூழல் மற்றும் தாவர இனங்களை மேம்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டத்தினைச் செயல்படுத்த இந்தப் பயணம் உறுதுணையாக அமையும். இந்த நிகழ்வின் போது தி கார்டன்ஸ் பை த பேவின் மூத்த இயக்குநர் திரு. தினேஷ் நாயுடு மற்றும் அலுவலர் செல்வி. வன்ரூ ஆகியோர் உடனிருந்தனர்.

சிங்கப்பூர் பூங்காவில் பின்பற்றப்படும், அதிக ஆற்றல், பயன்பாட்டுத்திறன் கொண்ட கட்டடத் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தும் கண்ணாடி வீட்டினையும் (conservatory) வானிலைக் கல்விக்கான விரிவாக்க மையம் தொடர்பான சிறப்பம்சங்களை தமிழ்நாட்டில் உள்ள பூங்காக்களில் நடை முறைப்படுத்துவது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

திருவிடைமருதூர் தொகுதியில் - அனைத்து

# கிளைக்கழக நிர்வாகிகள் – கழகத் தோழர்களைச் சந்திக்கும் நிகழ்ச்சி!

## சு.கல்யாண சுந்தரம் எம்.பி. – செ.இராமலிங்கம் – முனைவர் கோவி. செழியன் – நிர்வாகிகள் பங்கேற்பு!

*தஞ்சை, ஆக. 1-*

திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து கிளை கழகங்களுக்கும் கிளை நிர்வாகிகள், கழக தோழர்களை நேரில் சந்திக்கும் நிகழ்ச்சி மாநிலங்களவை உறுப்பினர், தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாண சுந்தரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் ஆகியோர்களுடன் கலந்து ஆலோசனை செய்ததன் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் மற்றும் ஒன்றிய கழக செயலாளர், திருப்பனந்தாள் மேற்கு ஒன்றிய துணை பெருந்தலைவர் கோ.க.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் மிசா என்.மனோகரன், திருப்பனந்தாள் மத்திய ஒன்றிய கழக செயலாளர் உதயா இரவிச்சந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் அருமைதுரை, மாவட்ட பிரதிநிதி மணலூர் குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் புகழேந்தி, மாவட்ட துணை அமைப்பாளர்,

இளைஞர் அணி வெங்கடேசன், ஒன்றிய பொருளாளர் அழகர், மாவட்ட கழக பிரதிநிதி கஜேந்திரன், திருக்கோடிகாவல் பாலமுருகன், துகிலி ரேவதி செல்ல பாண்டியன், கோட்டூர் பன்.பாலமுருகன், கஞ்சனூர் தாஜ். கருணாநிதி, சாத்தனூர் ராதாகிருஷ்ணன், இடையாநல்லூர் புகழேந்தி, கட்டா நகரம் ஆனந்தகுமார், மாவட்ட துணை அமைப்பாளர் செல்வகுமார், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் எம்.உதயா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



தி.மு.க. இளைஞரணி மண்டலம் 3, மற்றும் 4 மண்டலங்களுக்கான மாநில, மாவட்ட, மாநகர, அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தள பயிற்சி முகாம் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் குந்தாரப்பள்ளியில் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன் வரவேற்புரையாற்றிட மாவட்டச் செயலாளர்கள் பிரகாஷ் எம்.எல்.ஏ., மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை வகித்தனர். இதில் மாநில இளைஞரணி செயலாளர்கள் சீனிவாசன், பிரபுகஜேந்திரன், முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் நன்றி உரை ஆற்றினார். மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாஞ்சில் கி. மனோகரன்

## ஆகஸ்ட் 1 (2000)



**பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.**

**கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் 'நாவுக்கரசர்' என அழைக்கப்பட்டவர்.**

**கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.**

**"என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**